IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.46/2020

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | RAMESH |
| FATHER'S NAME | : | MUNISAMI |
| VILLAGE | : | PARADHARAMI |
| OCCUPATION | : | ARMY |
| AGE | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 23$^{th}$ day of July 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் பரதராமியில் குடியிருந்து ராணுவத்தில் பணிபுரிந்து வருகிறேன். 2வது எதிரியை தெரியாது. 1வது எதிரி பழனி என்பவரை எனது அப்பாவினுடைய நண்பர் ஆவார். எனது அப்பா கடந்த 2009 வருடம் இறந்துவிட்டார். அவர் இறப்பதற்கு முன்பாக 1ம் எதிரி பழனி என்பவரின் வீட்டு பத்திரத்தை வாங்கி ரூ.40000 கடனாக கொடுத்துள்ளார் என்ற விவரம் தெரிந்து எதிரியிடம் சென்று கேட்டபோது தருவதாக சொல்லி காலம் தாழ்த்தி வந்தார். கடந்த 28.08.2018 அன்று இரவு 07.30 மணிக்கு மேல் 1வது எதிரி பழனியின் வீட்டிற்கு நானும் எனது தம்பியும் சென்று பணத்தை திரும்ப கேட்டபோது பழனியின் மருமகள் எனது கையை பிடித்து கொண்டு எனது கையில் இருந்த வீட்டு பத்திரத்தை பிடுங்க பார்த்தார். 1வது எதிரி பழனி கட்டையால் எனது உச்சந்தலையில் அடித்தார். எனது தம்பியை அதே கட்டையால் வலது பக்க நெற்றியில் அடித்து காயம் ஏற்படுத்தினார். அக்கம்பக்கத்தினர் எங்களை குடியாத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். போலிசார் எங்களை 2 நாட்கள் கழித்து விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.46/2020

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | RAJESHKUMAR |
| FATHER'S NAME | : | MUNISAMI |
| VILLAGE | : | PARADHARAMI |
| OCCUPATION | : | LECTURER |
| AGE | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 23$^{th}$ day of July 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் பரதராமியில் குடியிருந்து வருகிறேன். 2வது எதிரியை தெரியாது. 1வது எதிரி பழனி என்பவரை எனது அப்பாவினுடைய நண்பர் ஆவார். எனது அப்பா கடந்த 2009 வருடம் இறந்துவிட்டார். அவர் இறப்பதற்கு முன்பாக 1ம் எதிரி பழனி என்பவரின் வீட்டு பத்திரத்தை வாங்கி ரூ.40000 கடனாக கொடுத்துள்ளார் என்ற விவரம் தெரிந்து எதிரியிடம் சென்று கேட்டபோது தருவதாக சொல்லி காலம் தாழ்த்தி வந்தார். கடந்த 28.08.2018 அன்று இரவு 07.30 மணிக்கு மேல் 1வது எதிரி பழனியின் வீட்டிற்கு நானும், எனது அண்ணனும் சென்று பணத்தை திரும்ப கேட்டபோது பழனியின் மருமகள் எனது கையை பிடித்து கொண்டு எனது கையில் இருந்த வீட்டு பத்திரத்தை பிடுங்க பார்த்தார். 1வது எதிரி பழனி கட்டையால் எனது அண்ணனை உச்சந்தலையில் அடித்தார். என்னை அதே கட்டையால் இடது பக்க நெற்றியில் அடித்து காயம் ஏற்படுத்தினார். அக்கம்பக்கத்தினர் எங்களை குடியாத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். போலிசார் எங்களை 2 நாட்கள் கழித்து விசாரித்து புாகர் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.